C.C.NO.141/2022 Page No.
DATE:18.02.2026.
P.W. 3 SUMANGALI W/O PARI

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை:</u>**

புகார்தாரர் பாரி என் கணவர் என்றால் சரிதான். நான் M.TECH ,Ph.D வரை படித்துள்ளேன். நான் ஏற்கனவே 20.09.2024 ம் தேதி சாட்சியம் அளிக்கும் போது குறுக்கு விசாரணையில் எனது கணவர் வீட்டிற்கு , குடியிருப்புகளின் வழியில் வேகமாக ஓட்டி வருவதை எதிரிகள் மற்றும் அங்கு குடியிருக்கும் அனைவரும் கேட்டதால் எதிரிகள் மீது பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

DATE:18.02.2026.
P.W. 5 GOPI S/O SATHASIVAM

<u>**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை:**</u>

12.07.2021ம் தேதி அம்பலாள் குடியிருப்பு டிசைடைரில் காவலராக பணி செய்து வருகிறேன் என்றால் சரிதான். நான் பணி செய்த காலத்தில் எதிரி தட்சாணமூர்த்தி என்பவர் எந்த பொறுப்பில் இருந்தார் என்று எனக்கு தெரியாது. அந்த காலகட்டத்தில் எதிரி தட்சாணமூர்த்தி அந்த குடியிருப்பு பகுதியில் செயலராள இருந்தார் என்றும் அவருக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கமாக காலை 6 மணிக்கு பணிக்கு சென்று மாலை 6 மணிக்கு வீடு திரும்புவேன் என்றால் சரிதான். நான் குடியிருப்பு பகுதியின் பிரதான கேட் காவலர் என்றால் சரிதான். யார் வந்தாலும் பிரதான கேட் வழியாக தான் வந்து செல்லவேண்டும். 12.07.2021 ம் தேதி போலிசாரும் பிரதான கேட் வழியாக வந்தார்கள் என்றால் சரிதான். 12.07.2021 ம் தேதி காலை 10.30 மணிக்கு நான் பணியில் இருந்த போது போலிசார் வந்து சுமார் 2 அடி நீளம் உள்ள உருட்டு கட்டை ஒன்றையும் , செங்கல் 4 சிறு துண்டுகளையும் கைப்பற்றுதல் மகசரில் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார் என்றால் சரியல்ல. அந்த குடியிருப்பு பகுதியின் செயலாளர் எதிரி தட்சாணமூர்த்தி என்பதால் என் முன்பாக போலிசார் கைப்பற்றிய பொருட்களை பற்றி சொல்லமால் எதிரி தட்சாணமூர்த்தி ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 18.01.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.